1995 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ்களை மலை மேல் இருக்கும் கிராமங்களுக்குக் கொண்டு செல்வதற்கு, சிறப்புத் திட்டமாக ஒதுக்கீடு செய்து, அங்கே பேருந்துகளை விட நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய பேருந்துகளை மலைப் பகுதிகளுக்கு இயக்குகின்றபோது, இன்றைக்கு இருக்கிற பேருந்துப் பயணக் கட்டணங்களைப் பார்க்கிறபோது, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் குறைவாகத்தான் இங்கே இருக்கிறது. மலைப் பகுதிகளுக்கு என்று தனியாகக் கட்டணங்களை உயர்த்தமுடியாது. அதே நேரத்தில் பெரிய பேருந்துகளை இயக்குகிறபோதும், அதற்கு ஆகின்ற செலவும் சிறிய பேருந்துகளை இயக்குவதற்கு ஆகின்ற செலவும் ஒரே செலவாகத்தான் ஆகும். ஆகவே அதைக் கருத்திலே கொண்டுதான், பெரிய பேருந்துகளை இயக்குகிறபோது, எண்ணிக்கையின் அடிப்படையில் பயணிகள் அதிகமாகப் பயணம் செய்கிறார்கள். அந்த அடிப்டையிலே பெரிய பேருந்துகளை மட்டும்தான் இப்போது இருக்கிற நிதி நிலை அடிப்படையில இயக்கமுடியுமே தவிர, சிறிய பேருந்துகளை இயக்குகிற நிலை இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 146, திரு. சஞ்சய் ராமசாமி, இருக்கையில் இல்லை. திரு.கே. செல்வராஜ், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

146—

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தல்

35630*—திரு. சஞ்சய் ராமசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து “காமராஜர் பெயரில் போக்குவரத்துக் கழகம்” ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும்?

[*1995 மார்ச் 29*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் மாவட்டம் கண்டார்கள். இன்றைக்கு மறைந்த தேசியத் தலைவர்களுக்கும், மறைந்த மக்கள் தலைவர்களுக்கும் புகழை மேலும் மேலும் மெருகூட்டுகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், பெருந்தலைவர் காமராஜர் பெயரில் போக்குவரத்துக் கழகம் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? இந்த ஆண்டே அதற்கு நடவடிக்கை எடுக்கின்ற வாய்ப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வி, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து காமராஜர் பெயரைச் சூட்டமுடியுமா என்பது, அதிலே நான் குறிப்பிட விரும்புவது. பட்டாபிராமன் கமிட்டி அறிக்கையின்படி, குறைந்தபட்சம் 350 பேருந்துகளும் அதிகபட்சம் 600 பேருந்துகளும் இருந்தால், அப்போது பிரிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தில்லைநாயகம் கமிட்டியின் பரிந்துரையில் குறைந்தபட்சம் 750 பேருந்துகளும் அதிகபட்சம் 1200 பேருந்துகளும் இருந்தால் பிரிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இப்போது அதற்குக் குறைவாக இருப்பதால், பிரிப்பதற்கானச் சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சட்ட சபையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் கேள்வி கேட்டபோது, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கக்கூடிய சாத்தியக்கூறு பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப் பிரிக்கும்போது, காமராசர்

1995 மார்ச் 29]

பெயரில் ஏற்கெனவே மாவட்டம் இருப்பதாலேயே பிரிக்கப்படும் போக்குவரத்துக் கழகத்திற்கு அந்த பெயர் வைக்கக்கூடாது; ஏற்கெனவே புரட்சித் தலைவர் ஆட்சியில் மட்டுமல்லாமல், புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியும் காமராசர் அவர்களுக்கு இன்னும் பேர் சேர்ப்பதற்கு ஆவல் கொண்டுள்ளது. ஆகவே, தமிழுக்காக வாழ்ந்து மதுரையிலே பத்திரிகைத் தொழில் நடத்திய பெரியவர் ஆதித்தனார் பெயரை பிரிக்கப்படும் போக்குவரத்துக் கழகத்திற்கு சூட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையில் பெயர் வரவேண்டும் என்பதற்காக அமைச்சரிடம் கேட்கிறீர்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு முதலிலேயே பதில் சொல்லி இருக்கிறேன். போக்குவரத்துக் கழகத்தைப் பிரிக்கின்றபோதுதான் எந்தப் பெயரை வைக்கலாம் என்று அரசு பரிசீலிக்குமே தவிர, இப்போது பிரிக்கின்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சஞ்சய் ராமசாமி, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டம் என்பது இப்போது இருக்கிறது. பெருந் தலைவர் காமராசர் பெயரில் மாவட்டத்தை உண்டாக்கிய பிறகு, காமராசர் மாவட்டத்திற்கு தனியாக ஒரு பேருந்து கழகத்தை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், கேட்டவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படும் என்ற சூழ்நிலையில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக காமராசர் மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகத்தை உண்டாக்கி, அதற்கு காமராசர் போக்குவரத்துக் கழகம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் புதிதாக பல்வேறு பணிகளை ஆற்றி தமிழகத்திற்கு சிறப்புச் சேர்த்து இருக்கின்ற பல்வேறு தலைவர் பெருமக்களுக்கு சிறப்புச் சேர்த்தவர்தான்

தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் தேவைக்கு ஏற்ப, பெரிய முன்னோர்களுக்கு சிலை வைப்பதாக இருந்தாலும் சரி, பெரிய தலைவர்களின் பெயரை மற்றவற்றிற்கு சூட்டுவதாக இருந்தாலும் சரி, புரட்சித் தலைவி அவர்கள் முன்னுரிமை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கிற கேள்வி, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து, காமராசர் பெயரை சூட்ட முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். பிரிக்கின்ற சாத்தியக்கூறுகளே இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 147, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

147—

பூம்புகார் பகுதியில் அணை கட்டுதல்

*17266—**திரு. எம். பூராசாமி:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் கடைமடைப் பகுதியில் மழைத் தண்ணீரைச் சேமிக்க உலக வங்கி உதவியுடன் அணை கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூம்புகார் கடைமடைப்பகுதியில் உலக வங்கி உதவியுடன் அணை கட்டி மழைத் தண்ணீரைத் தேக்கும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் காவிரி ஆறு பூம்புகாரில் கலக்கிறது. காவிரித் தண்ணீரைத் தந்து நமக்கெல்லாம் கண்ணீரைத் துடைத்த தானைத் தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் காவிரி ஆறு கலக்கும் இடமான பூம்புகாரில் தண்ணீரை சேமித்து வைத்தால், அங்கே பல லட்சக்கணக்கான ஏக்கர்களில் பயிர் செய்யும் விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பயன் பெறுவார்கள். எவ்வளவோ நிதிகளை நாம் பல நல்ல பணிகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, தயவுசெய்து, பொதுப் பணித் துறை அமைச்சர்